பாடினாலும் பரவாயில்லை என வேண்டுகோள் விடுத்தும், நீங்கள் அதைக் கேட்க மறுக்கிறீர்கள். அவையை நடத்த ஒத்துழைப்பு அளிக்க மறுக்கிறீர்கள். இது நாட்டு மக்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆகவே, அவையின் அலுவல் நேரம் முடிந்த காரணத்தினால் (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் நாளைக்கு தன்னுடைய பதிலுரையை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் நாளை பேரவையில் தனது பதிலுரையை வழங்குவார்கள். எனக்கு நீங்கள் ஒத்துழைக்காத காரணத்தினால், வேறு வழியின்றி, நான் எவ்வளவு தூரம் சொல்லியும் நீங்கள் கேட்காத காரணத்தினால், அவையின் அலுவல் நேரம் முடிந்த காரணத்தினால், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலைச் சொல்வார்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (4–8–2016) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

27. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

26. மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

27. மானியக் கோரிக்கை எண் *37*–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2016–2017.* (தமிழ், ஆங்கிலம்)

28. நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2016–2017.* (தமிழ்)

29. வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2016–2017.* (தமிழ்)

******

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS